Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 135

செவ்வாய்க்கிழமை
09 ஏப்ரல் 2024

பங்குனி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"நித்திரைக்கார நிமாலை தலைவரா போட்டால் எப்பிடி அந்தக் கட்சி உருப்படும்?"

# பொதுவேட்பாளர் ஒருவரே தமிழர்களுக்குத் தேவை!

## ஈ. சரவணபவன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

எந்தக் கட்சியாக இருந்தாலும் தமிழ் மக்களை ஒருங்கிணைத்து ஒரு பொது வேட்பாளரை முன்னிறுத்தவேண்டும். தமிழர்கள் தங்கள் வாக்குகளைச் சிதறடிக்காமல் இருக்கவேண்டும். குறிப்பாக தென்னிலங்கையைச் சேர்ந்தவருக்கு வாக்களிக்கக் கூடாது - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

15

## பன்றித்தலைச்சி உற்சவம் கவனத்தை ஈர்த்த காவடி!



யாழ்ப்பாணம், ஏப். 9

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் பங்குனித் திங்கள் உற்சவத்தின் போது, பறவைக் காவடியொன்று பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் நான்காம் 13

## சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் நிமால்

விரிவு:- பக். 03

## வயலின் வித்துவான் ஜெயராமன் மறைவு!



யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன் (வயது-65) நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

யாழ்ப்பாணம், நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் 13

## சட்டக் கட்டமைப்பை பலப்படுத்தத் திட்டம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 9

நாட்டில் விரைவான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கு சட்டக் கட்டமைப்பு நவீன 13

## மன்னாரில் விபத்து; இளைஞன் இறப்பு!



மன்னார், ஏப். 9

மன்னார், தாழ்வுப்பாடு பிரதான வீதி ரெலிக்கொம் சந்திக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மன்னாரில் உணவகமொன்றில் பணியாற்றிவந்த ஹற்றன் பகுதியைச் சேர்ந்த சந்திரகுமார் (வயது - 22) என்பவரே உயிரிழந்தவராவார். 13

### 12ஆம் திகதியன்று

## தபால் திணைக்களம் சிறப்புச் சேவைகள்!

கொழும்பு, ஏப். 9

சிங்கள - தமிழ் புத்தாண்டு மற்றும் ரமழான் ஆகிய நீண்டவார விடுமுறை நாட்களில் நாடு முழுவதும் தபால் பொருள்களை விநியோகிப்பதற்கான விசேட சேவையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை தபால் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இதன்படி, பொதுவிடுமுறை தினமான ஏப்ரல் 12ஆம் திகதி நாடளாவிய ரீதியில் உள்ள தபால் நிலையங்கள் மற்றும் துணைத் தபால் நிலை 13



றைனோ சிமென்ட் ரூப்பிங் ஷீட்

சிறந்த விலைக்கு நீண்ட காலம் பாவிக்கக்கூடிய கூரை

RHINO
60 YEARS
www.rhino.lk

ரூ. 3,955/- இலிருந்து துரித அழைப்பு 0115748728 • இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட் • 60 வருட நம்பிக்கை

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலைத் திட்டத்துக்கு நெடுந்தீவிலும் பூமி பூஜை



யாழ்ப்பாணம், ஏப்.9
தீவகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சூரிய ஒளி மின்சாரம் மற்றும் காற்றாலை மின்சாரம் போன்ற வேலைத்திட்டங்களுக்கான பூமி பூஜை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இலங்கை - இந்திய அரசுகள் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இந்திய தனியார் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-27)

## வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.9
அருள்மிகு கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் மஹோற்சவப் பெருவிழா, எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பன்னிரு நாள்கள் திருவிழா இடம்பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு தேத் திருவிழாவும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

24 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு மஹோற்சவ பிராயச்சித்த அபிஷேகம், சுவாமி வீதியுலா, வைரவர் சுவாமி ஆராதனை, அருட்பிரசாதம் வழங்கல் என்பன இடம்பெறும்.

அடியார்கள் அபிஷேகத்துக்குரிய பால், தயிர், இளநீர், பூ, பூமாலை போன்றவற்றைச் சமர்ப்பித்து விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ப-159)

*** *** ***

யாழ்ப்பாணம், ஏப். 9
திருநெல்வேலி, அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா, இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை திருமஞ்சத் திருவிழாவும், 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும், 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.9
'யாழ்ப்பாணத்தை வரைபடமாக்கல்' எனும் தொனிப்பொருளில், இலங்கைக்கான நெதர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில், கண்காட்சி ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக திட்டமிடல் வரலாற்றுத் துறை மற்றும் தொல்பொருள்துறை மாணவர்கள் 14 பேரும், நெதர்லாந்து பல்கலைக்கழக மாணவர்கள் 15 பேரும் இணைந்து யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூர் ஆலயம், யாழ்ப்பாணக் கோட்டை மற்றும் நெடுந்தீவு உள்ளிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரபல்யமான பல இடங்களின் புகைப்படங்களைக் கண்காட்சியில் காட்சிப்படுத்தினர்.

கண்காட்சியில் இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் போனி ஹோர்பாக், இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, யாழ். மாவட்ட பதில் செயலர் ம. பிரதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-20)

# கற்சிலைமடு - முத்துஐயன்கட்டு வீதியைச் சீரமைக்க கோரிக்கை

ஒட்டுசுட்டான், ஏப்.9

**கற்சிலைமடுச் சந்தியில் இருந்து முத்துஐயன்கட்டு செல்லும் வீதியைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இந்த வீதியை முத்துஐயன்கட்டு, கனகரத்தினபுரம், கற்சிலைமடு, மன்னாங்கண்டல் எனப் பல கிராம மக்கள் பயன்படுத்துகின்றனர். இப்பெயர்வின் முன்னர் பஸ் செல்லும் வீதியாகக் காணப்பட்டது. விவசாயிகளும் இந்த வீதியை அதிகம் பயன்படுத்துகின்றனர்.

இந்த வீதிநீண்டகாலமாகச்சீரமைக்கப்படாது, குண்டும் குழியுமாக உள்ளது. மக்கள் போக்குவரத்தில் ஈடுபடமுடியாதநிலைமையில் காணப்படுகின்றது. இந்த வீதியைச் சீரமைத்துத்தரசம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-500)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.9
அரச சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தென்மராட்சிக் கிளையின் பொதுச் சபைக் கூட்டம், தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

தலைவராக செ. சுப்பிரமணியமும், செயலாளராக ந. ஜெயகுமாரும், பொருளாளராக சு. விஜயநாதனும், உபதலைவராக மு. பாலசுப்பிரமணியமும், உதவிச் செயலாளராக சு. உலகநாதனும், நிர்வாக உறுப்பினர்களாக சி. அருணாசலம், க. மங்களேஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ப-9)

## நீர் சுத்திகரிப்பு மையம் கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி, ஏப்.9
செல்வாநகர் மற்றும் உருத்திரபுரம் பகுதியில் சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை வீடமைப்பு நகரஅபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மக்களின் பாவனைக்காக வழங்கினார்.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர், கிளிநொச்சி மாவட்ட உதவிச் செயலர், அமைப்பாளர்கள் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-113)

## பொங்கல் உற்சவம்

தெல்லிப்பழை, ஏப்.9
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம், வழுந்துப்பானை ஏற்றலுடன் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அபிஷேக நிகழ்வுகள் மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து, மு.ப. 11 மணிக்கு விசேட பூசைகளும், மு.ப. 11.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், மாலை 4.30 மணிக்குஅம்பாள் உள்வீதி, வெளிவீதி உலா வரும் திருக்காட்சியும் நடைபெறுமென ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

# சுயலாபங்களுக்காக மக்கள் மீது வன்முறை!

### பொன்னாவெளி சம்பவத்துக்கு சமத்துவக் கட்சி கண்டனம்

முல்லைத்தீவு, ஏப். 9
அமைதிவழியில் தமது நிலங்களைப் பாதுகாக்க போராடி வரும் பொன்னாவெளி மக்கள் மீது தங்களின் சுயலாபங்களுக்காக வன்முறையைத் தூண்டிவிடும் நடவடிக்கைகள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை.

-இவ்வாறு பொன்னாவெளியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் குறித்து வெளியிட்ட அறிக்கையில் சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆபத்தை ஏற்படுத்தும் முதலீட்டு முயற்சிகளைத் தங்களது பிரதேசத்துக்குள் அனுமதிக்காதீர்கள் என்ற பொன்னாவெளி மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஒருபோதும் நிராகரிக்கமுடியாது.

பொன்னாவெளி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சுண்ணக்கல் அகழ்வு காரணமாக அங்குள்ள கிராமங்கள் முற்றுமுழுதாகப் பாதிக்கப்படும். பிரதேசம் முழுவதும் உவராக மாறும் அபாயம் ஏற்படும். இதற்கெதிராக அமைதி வழியில் மக்கள் 270 நாள்களைக் கடந்து போராடி வருகின்றார்கள்.

அவர்கள் மீது தங்களின் சுயலாபங்களை நிறைவேற்றிக்கொள்ளும் முகமாக வெளிப்பிரதேசங்களிலிருந்து மக்களை அழைத்துச் சென்று மோதவிடும் மிக மோசமான நடவடிக்கைகள்கண்டிக்கத்தக்கவை. மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை நாமும் குரல் கொடுப்போம் - என்றுள்ளது. (ச-13)

# பௌத்த வாலிபர் சங்கம் யாழ்ப்பாணத்தில் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப்.9
யாழ்ப்பாணம் வந்திருந்த கொழும்பு பௌத்த வாலிபர் சங்கத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ். வணிகர் கழகத்தில் இடம்பெற்ற சந்திப்பில், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் இன, மத ரீதியான பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலில் யாழ். வணிகர் கழகத் தலைவர் இ. ஜெயசேகரம், கொழும்பு பௌத்த வாலிபர் சங்கத்தின் தலைவர் மகேந்திர ஜெயசேகர, யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார், சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா. நந்தகுமார், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் பூபாலசுந்தரம் ஐங்கரன், மத குருமார்கள், யாழ். வணிகர் கழகத்தினர், சிவில் சமூகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சஜித் - அநுரவின் விவாதம் அரச தொலைக்காட்சியில்

கொழும்பு, ஏப்.9

**எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்காவுக்கும் இடையிலான நேரடி விவாதத்தை ஐ.ரி.என். தொலைக் காட்சியில் நேரடியாக ஒளிபரப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தர விட்டுள்ளார்.**

தனியார் தொலைக்காட்சிகள் யாவும் இந்த விவா தத்தை ஒளிபரப்பத் தயாராகவுள்ள நிலையில் அரச தொலைக்காட்சிச் சேவை மௌனம் காக்கி றது என நாடாளுமன்ற உறுப்பினர் தொலவத்த சுட்டிக்காட்டியதை அடுத்தே ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தமது பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட் டங்கள் பற்றியே இருவரும் விவாதிக்கவுள்ளனர். முதலில் இரு கட்சிகளினதும் பொருளாதார குழுக் களே விவாதத்தில் ஈடுபடுவதாக இருந்தது. தற் போது இரு கட்சித்தலைவர்களும் விவாதத்தில் ஈடுபடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)

## கடற்படைச் சிப்பாய்களுக்கு பாம்பைக் கையாள பயிற்சி!

கொழும்பு, ஏப்.9

புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட கடற்படைச் சிப்பாய்க ளுக்கு பாம்புகளைக் கையாளும் பயிற்சி கடந்த 3ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சியின்போது, பாம்புகளின் உடல் தொடர்பான விளக்கங்களும் செயன்முறைப் பயிற்சிகளும் வழங்கப்பட் டுள்ளன. வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகளால் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. (ம-6)

## சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் நிமால்

கொழும்பு, ஏப்.9

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற கட்சி யின் அரசியல் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

நேற்று நடந்த கூட்டத்தில் கட்சியின் முன்னாள் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் பங்கேற்றிருந் தார். (எ-இ)

## கெஹலியவுக்கு மறியல் நீடிப்பு



கொழும்பு, ஏப்.9

தரமற்ற மருந்துக் கொள்வனவு தொடர் பான குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெல உட்பட 7 பேருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று மாளிகாகந்த நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களின் விளக்க மறியல் எதிர்வரும் 22ஆம் திகதிவரை நீடித்தது நீதி மன்றம். (எ-இ)

## இலங்கைக்கு இந்திய வெங்காயம்

இந்தியாவின் 'அண்டைநாடுக ளுக்கு முதலிடம்' என்ற கொள் கையின்கீழ் இலங்கைக்குப் பெரிய வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய இந்தியா தீர்மானித்து ள்ளது என்று அந்த நாட்டு ஊடகங் கள் தெரிவித்துள்ளன. இந்திய அரசாங்கம் தற்போது வெளிநாடு களுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதித்துள்ள நிலையில், இந்தத் தகவல் வெளி யாகியுள்ளது. (எ-இ)

## நுகர்வோருக்கு எச்சரிக்கை!

இறக்குமதி செய்யப்பட்ட சொக்லேட் மற்றும் இனிப்புவகைகளை பண்டி கைக் காலங்களில் கொள்வனவு செய் யும்போது அவதானமாக இருக்கவேண் டும் என்று நுகர்வோர் அதிகாரசபை அறிவித்துள்ளது. காலாவதியான இனிப்புப்பொருள்களை விற்பனை செய்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு விடுக் கப்பட் டுள்ளது. (எ-இ)

## 3 மாதங்களில் 6 லட்சம் சுற்றுலாவிகள்

கொழும்பு, ஏப்.9

இந்த ஆண்டின் முதல் 3 மாதங்களில் 6 இலட்சத்து 35 ஆயிரத்து 784 சுற்று லாவிகள் இலங்கை வந்துள்ளனர் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (எ-இ)



## கொழும்பு மாவட்டத்தில் அபாயமான 100 கட்டடங்கள்!

கொழும்பு, ஏப். 9

கொழும்பில் 100 கட்டடங்கள் இடிந்து விழும் நிலையில் காணப்படுகின் றன என்று கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து கொழும்பு நகரிலுள்ள கட்டடங்களின் தரம் பற்றி ஆய்வு செய்தபோதே இந்த விடயம் வெளிப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் 60 தொடக்கம் 70 கட்டடங்கள் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளன என்று நகர திட்ட மிடல் பணிப்பாளர் அனுஜா மெண்டிஸ் தெரிவித்துள்ளார். அனுமதி பெறாது கட்டப்பட்ட கட்டடங்க ளுக்கு அனுமதி பெற்றுக்கொள்வதற்கு 14 நாள்கள் தவணை வழங்கப்பட்டுள்ளதாகவும், 14 நாள் களுக்குள் உரிய அனுமதியைப் பெறாவிட்டால் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அனுஜா மெண்டிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம-6)

## பட்சி தினம் தெரியுமோ?

இண்டைக்கு உலகத்தை ஆட்டிப்படைக் கிறதே தொடர்பாடல் தான். இப்ப எல்லா அலுவலையும் இருந்த இடத்தில இருந்தே செய்யமுடியுதெண்டால், தொடர்பாடலில ஒவ்வொருநாளும் முன்னேறிக்கொண்டு போறது தான் காரணம். இப்ப போனிலையே காதலிச்சு, போனிலையே கலியாணமும் கட்டுற அளவுக்கு ரெக்னோலொஜி வளர்ந்திட்டுது. ஆனால் சில பொதுவான விசயங்களுக்கு இன்னும் 'லாண்ட் லைன்' போன்தான் பாவனையில இருக்கு. முக்கியமா கவர்மெண்ட் ஒப்பீஸுகளுக்கு உத்தி யோகபூர்வமா கோல் எடுக்கவேணும் எண்டால், அந்தந்த ஒப்பீஸுக்குரிய 'லாண்ட்லைன்' நம்ப ருக்குத்தான் சனங்கள் கோல் எடுத்துக் கதைக்க வேணும். சனங்கள் கோல் எடுத்தால் அதை ஆன்ஸர் பண்ணி, அவை எதுக்காகக் கோல் எடுத்தவை எண்டு ஒப்பீஸ்காரர் கேக்கவும் வேணும். ஆனால் இப்ப எல்லாரும் செல் போனுக்கு மாறிட்டதாலையோ என்னவோ, இந்த லாண்ட்போனில கோல் எடுத்தால் கதைக்கப் பஞ்சிப்படுகினம்.

உதயன் பேப்பருக்கு நேற்று ஒரு கடிதம். யாழ்ப்பாணம் முனிசிபல் ஆணையாளர்தான் அந்தக் கடிதம் போட்டிருந்தவர். குருநகரில வந்த டெங்குத்தாக்கம் பற்றி பேப்பரில வந்த செய்தி பற்றி தங்கடகருத்தை சொல்லி, இனிமேல் இப்பிடியான செய்தி போடுறதெண்டால் தன்னையோ இல்லாட்டி சுகாதார மருத்துவ அதி காரியையோ கேட்டுப்போட்டு போடுங்கோ 'எண்டு அந்தக் கடிதத்தில எழுதியிருந்தார். இதைப்பற்றி ஒருக்கா அவரோட கதைப்பம் எண்டு, அவரின் 'லெட்டர்ஹெட்டில' இருந்த 'லாண்ட்போன்'நம்பருக்கு கோல் எடுத்தால் மணி அடிக்குது, அடிக்குது, அடிச்சுக் கொண்டே இருக்குது, ஒருத்தரும் எடுப்பார் இல்லை. சரி, அவர் ஏதோ பிஸியாக்கும் எண்டிட்டு செயலாள ரின்ர 'லாண்ட் போன்' நம்பருக்கு எடுத்தால் அது வேலையே செய்யேலை. அதுக்குப் பிறகு பொதுசன தொடர்பு அதிகாரி எண்டு போட்டிருந்த நம்பருக்கும் எடுத்தால் அதுவும் மணியடி விளை யாட்டுத்தான். ஒருத்தரும் ஏன், எதுக்கு எண்டு கேக்காமல் அந்தப் போனும் தன்ரபாட்டில அடிச்சுப் போட்டு நிண்டிட்டுது. ஒருக்கா ரண்டு தரமில்லை, நாலைஞ்சு தரம் இந்த மூண்டு நம்பருக்கும் கோல் எடுத்தால் இதே நிலைதான்.

ஒரு ஆத்திர அவசரமெண்டு, இவையின்ர 'லாண்ட்போனுக்கு' சனம் எடுத்தாலும் இது தானே நிலைமை. ஒருவேளை அந்த 'லாண்ட் போனை' பாவிக்கிறேலை எண்டால், அதை ஏன் லெட்டர்ஹெட்டில போடுறியள் ? பேசாமல் செல்போன் நம்பரையே போடலாமே? முதலே சொன்னமாதிரி 'லாண்ட்போன்' தான் உத்தி யோகபூர்வமாத் தொடர்புகொள்ளவேண்டிய நம்பர். அதில வாற கோலுக்குத்தான் அதிகாரி மார் முக்கியத்துவமும் குடுக்கோணும். ஆனால் அப்பிடியெல்லாம் இஞ்சத்தை அரசாங்க ஒப்பீஸ்களில நடக்கிறேலை. ஏதோ வேண்டாப் பெண்டாட்டி போலத்தான் உந்த லாண்ட் போனுகளை அவையள் பாக்கினம் போல.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்காக கச்சதீவை பயன்படுத்துவதை நிறுத்துக

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.9

இந்திய மத்திய அரசாங்கத்திலும், தமிழகத்திலும் கச்சதீவு தொடர்பில் புதிய நிலைப்பாடு ஒன்று தோன்றியுள்ளது. அரசியலுக்காகக் கச்சதீவு விடயத்தைக் கையாள்வதை அவை கைவிடவேண்டும்.

-இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என். எம்.ஆலம் தெரிவித்தார். மன்னாரில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியலுக்காக இந்திய மத்திய அரசிலும், தமிழகத்திலும் கச்சதீவு விவகாரம் கையாளப்படுகின்றது. இது சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் அந்தநாட்டு மீனவர்களை உற்சாகமூட்டுவதுடன், சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதை ஆதரிக்கும் வகையிலும் இருக்கின்றது.

இலங்கை மீனவர்களைப் பொறுத்த வரையில், பிரதானமாக வடக்கு மீனவர்களைப் பொறுத்தவரையில் உள்ள ஒரே நிலைப்பாடு இந்திய மீனவர்கள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபடக்கூடாது என்பதே. எமது எல்லைக்குள் சட்டவிரோத இழுவைமடித் தொழிலை முன்னெடுக்கக்கூடாது என்பதிலும் உறுதியாக இருக்கின்றோம்.

இரு நாடுகளுக்கு இடையிலான் ஒப்பந்தங்களைக் கண்ணியமாக நடைமுறைப்படுத்தவேண்டும். அரசியலுக்காக அவை பயன்படுத்தப்படுவது இரு நாடுகளுக்குள்ளும், மக்களின் மனங்களிலும் பெரும் முரண்பாடுகளை ஏற்படுத்தும். கச்சதீவு விடயத்தை அரசியலுக்காகப் பயன்படுத்துவதைக் கைவிட வேண்டும் - என்றார். (எ-56)



## மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 9

கைதடி மேற்கு, மாதர் கிராம அபிவிருத்தி அதிகார சங்கத்தின் இந்த ஆண்டுக்கான மகளிர் தின நிகழ்வு, கைதடி அன்னை ரத்தினம் மணிமண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் தலைவி சுபத்திராதேவி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் உதயன் குழுமத்தின் பணிப்பாளர் யசோதை சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தின் முதல்வர் ஜெயரூபன், யாழ். மாவட்டச் செயலக முகாமைத்துவ உதவியாளர் கௌ.வசந்தினி, மிக்கிபிரிண்டர்ஸ்முகாமைத்துவப் பணிப்பாளர் பொ.தயாளினி, கிராம அலுவலர் திருமதி சு.கனகபூரனி, அபிவிருத்தி உத்தியோகத்தர் நிஷாந்தி, கைதடி இணுங்கி தோட்ட அன்னை ரத்தின மணிமண்டப நிர்வாகி ச.சிவமலர், மகளிர் அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-125)



அனலைதீவு, பெரியகுளம் மகா கணபதி கோவில் வருடாந்த பெருந்திருவிழா, கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-9)



வவுனியாவில் வருடாந்த சித்திரைக் கலை விழா நிகழ்வு வவுனியா நகர சபை மைதானத்தில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது. அதில்பொலிஸ் மோப்ப நாய்களின் சாகச நிகழ்வும் இடம்பெற்றது. (எ-110)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்குத் திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மூத்த சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படக் கூடும்.

**கடகம்:** புதிய முயற்சியைக் காலையிலேயே தொடங்குவது நல்லது. தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும்.

**சிம்மம்:** புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை. எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

**கன்னி:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். மனதில் அவ்வப்போது சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**துலாம்:** தந்தைவழி உறவினர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். என்றாலும் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். சிலருக்குத் தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். தாய்வழி உறவுகளுக்காகச் செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார்.

**மகரம்:** உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்க அதிகாரிகளின் அறிமுகமும், அவர்களால் ஆதாயமும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். சகோதரர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். என்றாலும் மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

**மீனம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயல்படுவீர்கள்.

# கல்முனை பிரதேச செயலக விவகாரம் பல்கலைக்கழக மாணவரும் இணைவு

அம்பாறை, ஏப்.9

கல்முனை வடக்குப் பிரதேச செயலக நிர்வாக அத்துமீறல்கள் மற்றும் கல்முனை தெற்குப் பிரதேச செயலகப் பிரிவின் சட்டவிரோத நடவடிக்கையை மாவட்டச் செயலகமும் உள்நாட்டலுவல்கள் அமைச்சும் அனுமதித்து வருகின்ற நிலையில் அவற்றைக் கண்டித்து 11ஆவது நாளான கடந்த வியாழக்கிழமை பொதுமக்களுடன் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டம் சேவை குடியிருப்பு, கணேஷ் மகா வித்தியாலய முன்றிலிலிருந்து நடைபயணமாக ஆரம்பிக்கப்பட்டது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# ஆயிரம் ரூபா வேதனமும் ஆவணப்படுத்தலும்

மலையக நடனக்கலையைப் பாதுகாத்து தொடர்ந்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பரிசீலனை செய்வதற்காக தனிக்குழுவொன்று அமைக்கப்படவிருக்கின்றது. ஜனாதிபதி மாளிகையில் கண்டி பாரம்பரிய நடனக் கலைஞர்களுடனான சந்திப்பின் போது இந்த விடயத்தைத் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில். கலைகள் நிச்சயம் ஆவணப்படுத்தப்பட வேண்டியவை. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், அந்தக் கலைகளின் பிறப்பிடமான மலையக மக்களின் வாழ்வியலை வளப்படுத்த ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரசாங்கத்தினரும் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்? என்ற கேள்வி எழுவது இங்கு தவிர்க்கப்பட முடியாததாகின்றதல்லவா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறுபான்மை மக்களின் வாக்குகளில் அதீத நம்பிக்கை கொண்டவர். முதிர்ச்சி பெற்ற அரசியல்வாதியென்பதால் சிறுபான்மை மக்களுடைய வாக்குகளுக்கு இருக்கும் பலம் அவருக்குத் தெரியும். தமிழர்கள் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்ததால் தனது ஜனாதிபதிக் கனவு முன்னொரு காலத்தில்சுக்குநூறாகக்கலைந்துபோனபட்டனுபவமும் அவருக்கு உண்டு. மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பி, மைத்திரியை ஆட்சியேற்றிய சிறுபான்மை மக்களின் வாக்குகளின் மீடுக்கையும் அவர் அருகிருந்து உணர்ந்தவரே. ஆதலால், சிறுபான்மை மக்களை நோக்கிய அவரின் ஓட்டத்தை திடீர்ப்பாசத்தை புரிந்து கொள்வதொன்றும் அவ்வளவு சிரமத்துக்குரிய காரியமல்ல. ஆனால், அந்த மக்கள் கூட்டத்துக்காக, தனது நீண்ட நெடிய அரசியல் பயணத்தில், சதியாட்டங்களைத் தவிர வேறொன்றையும் ரணில் செய்யவில்லை என்பதே கசப்பான மெய்.

சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரைக்கும் இலங்கை ஒரு சபிக்கப்பட்ட தேசம்தான். ஈழத்தமிழர்களுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகளைப் போன்று மலையக மக்களும் இந்தத் தீவில் காலம்காலமாக வஞ்சிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றனர். இனப்படுகொலைகளுக்குப் பதிலாக அவர்கள் மீது 'பொருளாதாரப் படுகொலைகள்' அரசாங்கத்தாலும், அரச ஆதரவுபெற்ற 'கொம்பனிகளாலும்' ஏவப்பட்டன ஏவப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஈழத்தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இடையிலான வேறுபாடு அவ்வளவே. மற்றும்படி இரு இனக்குழுக்களும் ஆலைவாய்க் கரும்பாக நெரிக்கப்பட்டுக் கொண்டிருப்பது 'பொதுமைப்பாடே'. ஆயிரம் ரூபா ஊதியத்தை வழங்குமாறு நெடுங்காலமாக மலையக மக்கள் (தோட்டத் தொழிலாளர்கள்) போராடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் கோரிக்கை இன்னமும் செவிசாய்க்கப்படவில்லை. 2020களில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதிருந்த பொருளாதார இயலுமையில் நாடு இப்போதில்லை. விலையேற்றங்கள் இடியாக இறங்கிக் கொண்டிருக்கின்றன. வற்வரியும் தன் பங்குக்கு வதைக்க ஆரம்பித்துள்ளது. மூன்றாண்டுகளுக்கு முற்பட்ட ஆயிரம் ரூபா ஊதியக்கோரிக்கைகூட முற்றுமுழுதாக இன்னமும் மெய்ப்பட்டபாடில்லை. இவ்வாறிருக்கையில் மலையக மக்களின் நடனத்தை ஆவணப்படுத்துவது ஒன்றுதான் மலையகத்தவர்களின் எதிர்பார்ப்பா? என்ற கேள்வியை பொதுப்புரிதலை- ரணில் அரசாங்கம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

மலையக மக்களின் குருதியை அட்டைகள் மட்டும் உறிஞ்சவில்லை. அட்டைகளுடன் போட்டிபோட்டு பெருந்தோட்டக் ' கொம்பனிகளும் 'காலாகாலம் மாறி மாறி ஆட்சிக்குவரும் பேரினவாத அரசுகளும்தான் உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன. தம்மைத் 'தேசிய இனமாக' அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் வாழ்வுரிமையையும், தமக்கேற்ற ஊதியத்தையும்தான் மலையக மக்கள் ரணில் அரசிடம் எதிர்பார்க்கின்றார்கள். இவை நிறைவேற்றப்படாமல் மேற்கொள்ளப்படும் எந்தவொரு வெளி ஆரவாரங்களும் மலையகத்தின் உள்ளத்தை வெல்லப்போவதில்லை.



# அச்சமூட்டும் வகையில் எச்.ஐ.வி. தொற்று உயர்வு

**கொழும்பு, ஏப்.9**

**நாடளாவிய ரீதியில் அடையாளம் காணப்படும் எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வேலைத்திட்டப் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ஜானகி விதான தெரிவித்தார்.**

கடந்தமூன்றுமாதங்களில்நாடளாவிய ரீதியில் 695 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 14 சதவீத அதிகரிப்பாகும். இது மிகவும் பாரதூரமானது.

கொழும்பு மாவட்டத்தில் செயற்படும் சிகிச்சை நிலையங்களில் பதிவாகும் எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கை 40 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. இளம் பராயத்தினரிடம் போதிய விழிப்புணர்வு இன்மையே இதற்குப் பிரதான காரணம்.

தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வலையமைப்பைப் பயன்படுத்திசுயபரிசோதனையைசெய்து கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# புத்தாண்டை முன்னிட்டு 20 கிலோ அரிசி

கொழும்பு, ஏப்.9

வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் 2.75 மில்லியன் குடும்பங்களுக்கு தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, தலா 20 கிலோ அரிசி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இதற்காக 20 ஆயிரம் மில்லியன் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (எ-இ)

# பாரம்பரிய பண்டங்களின் விலைகள் சரிவு

தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்கான பாரம்பரியப் பண்டங்களுக்கான செலவு 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தஆண்டுகுறைந்துள்ளது. ஆயினும் 2019 ஆம் ஆண்டிலிருந்ததை விட தொடர்ந்தும் இரண்டு மடங்கு அதிகமாகவே உள்ளது என்று ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பொருள்களுக்கான செலவு 2023 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் 2 சதவீதத்தால் குறைந்துள்ளதைக் காட்டுகிறது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் செலவு 2.3 மடங்கு அதிகரித்திருந்தது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் இது சற்றுக் குறைந்து 2.2 மடங்காக உள்ளது என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# விமானப்படைச் சிப்பாய் மீது துப்பாக்கிச் சூடு

பாதுக்கை அங்கமுவ பிரதேசத்தில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் விமானப் படையைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. உயிரிழந்தவர் பொலிஸாரின் உத்தரவை மீறி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றார் என்றும், பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# இலங்கையரை மீட்பதில் சிக்கல்

மியான்மரில் இணையவழிக் குற்றச்செயல்களில் ஈடுபடுவோரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள 48 இலங்கையர்களை மீட்பது சவாலான விடயம் என்று தெரிவிக்கப்படுகின்றது. தடுத்து வைக்கப்பட்டிருந்த 56 இலங்கையர்களில் 8 பேர் அண்மையில் மீட்கப்பட்டிருந்தாலும், அவர்களை தரைமார்க்கமாக யங்கோன் நகருக்கு கொண்டுசெல்வது சவாலாக உள்ளது என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (எ-இ)

## நாளை

**10.04.2024**

**புதன்கிழமை**

**பங்குனி 28**

சுபநேரம் : 04.36 -06.06


ராகுகாலம் : 12.06 - 01.36

## நாளொரு நல்வார்த்தை

**நீங்கள் போதுமான அளவில் தோல்வி அடையவில்லை எனில் புதுமையான காரியங்களை சோதனை செய்யவில்லை என்று அர்த்தம்.**

**—எலான் மஸ்க் —**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நானாட்டான் மற்றும் முசலிப் பிரதேச அறநெறிப் பாடசாலைகள் ஒன்றிணைந்து முன்னெடுத்த 'தெய்வீக கிராமம்' நிகழ்வு, நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்து மாரியம்மன் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் சைவப் பெரியார்கள், அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-213)



முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களின் உள நல மேம்பாட்டுக்கான போட்டிகள் அண்மையில் மல்லாவி மத்திய கல்லூரியில் இடம்பெற்றன. முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ச.யசிந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேசசபை, துணுக்காய் பிரதேசசபை, புதுக்குடியிருப்பு பிரதேசசபை, கரைதுறைப்பற்று பிரதேச சபை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் பங்கு கொண்டனர். (ச-13)



நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள், வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. அதிபர் க.கோணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஐ.தேவராஸ்வரன் கலந்துகொண்டார். (ப-9)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தினூடாக, அமரர்களான சின்னப்பு ஆசைப்பிள்ளை, ஆசைப்பிள்ளை ஆனந்தம் நினைவாக யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் தரம் - 1 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (ப-66)



பிரசித்திபெற்ற நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா, கடந்த வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ப-66)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் தலைமையில் வாராந்த நிகழ்வு, கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ். சண் இசைக் குழுவின் சிறப்பு இன்னிசை நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து இளவாலை பெரியவிளானைச் சேர்ந்த பொருளாதார நலிவுற்ற குடும்பமொன்றுக்கு 75 ஆயிரம் ரூபா நிதியும், தொண்டைமானாறு கெருடாவிலைச் சேர்ந்த 'இளந்துளிர்' அமையத்தினருக்கு சித்திரைக் கொண்டாட்ட நிகழ்வுக்காக 35 ஆயிரம் ரூபா நிதியும் நேரடியாக வழங்கப்பட்டது. (ப-66)





அராலி சிறீமுருகன் சனசமூக நிலையத்தின் 84 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, குறித்த நிலையத்தின் ஏற்பாட்டில் மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி நிகழ்வு, கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் சிறீமுருகன் சனசமூக நிலையத்தினர், சைக்கிள் ஓட்ட வீரர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகள் கையளிப்பு நிகழ்வு

கொடிகாமம், ஏப். 9

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க தலைமையில் வரணி, நாவற்காடு பகுதியில், புதிதாக அமைக்கப்பட்ட வீடுகளை இரு குடும்பங்களுக்கு, கையளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது.


வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில், வரணி,நாவற்காட்டில் வசித்து வரும் குகனேஸ்வரி மற்றும் ஞானேஸ்வரி ஆகிய பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டகுடும்பங்களுக்கே இந்த வீடுகள் கையளிக்கப்பட்டன. நிகழ்வில் 52 ஆவது படைத்தலைமையகக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகம்பத், இராணுவ அதிகாரிகள், கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-9-159)





கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் குருளைச் சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அதிபர் எஸ்.தவகீஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ச-17)

திருநெல்வேலி தென்கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், கிளிநொச்சி உளநல சமூகத்தின் அனுசரணையுடன் பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக ஆண், பெண் இருபாலாருக்குமான விழிப்புணர்வுச் செயலமர்வு, வாலைஅம்மன் சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலகப் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கலந்துகொண்டு விழிப்புணர்வுக் கருத்துரை ஆற்றினார். (ப-66)







இணுவிலில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் நடந்த விபத்தில் உயிரிழந்த இளம் தொழிலதிபர் ஆனந்தராசா சயந்தன் ஞாபகார்த்த குருதிக் கொடை முகாம் , இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையில், இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இணுவில் இந்து விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், மறைந்த சயந்தனின் உறவுகள், இணுவில் கிராம இளைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டு குருதிக்கொடையை வழங்கினர். (ப-66)







வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நல்லூர் மற்றும் தென்மராட்சிக் கலைஞர்களின் கலைஞர் சங்கமம் நிகழ்வு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 04 . 1972

இறப்பு
06 . 04 . 2024



## மகேஸ்வரன் மதீசன்

உரிமையாளர் - (Mahanathy Tex, Jaffna Electricals Showroom, Sankamam Tex, Abi Pvt Ltd, Malabar Electrical, Colour Pluz)

சரசாலை வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியா திருச்சி மாவட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் மதீசன் இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரன் (Jaffna Electricals) சரஸ்வதி தம்பதியின் மூத்த மகனும், காலஞ்சென்ற கணேசன் (நாவற்குழி), விஜயா தம்பதியின் அன்பு மருமகனும், குமுதினியின் (India) அன்புக் கணவரும், ஆபூர்வன் (UK), ஆதித்தியா (India), அபிநயன் (India), ஆதவி (India) ஆகியோரது அன்புத் தந்தையும், மதீதரன் (Mahesh and Sons), யசோதினி (US), சாமினி (UK), முகுந்தன் (Jaffna Electricals), ஆகியோரின் அன்புச் சகோதரனும், வித்தியசங்கர் (US), நிசாந்தன் (UK), சிவதாரணி (Colombo) வேதகி (Colombo) ஆகியோரின் மைத்துனரும், சௌமியா (US), துளசிந்தன் (US), அயிறா (UK), நிலன் (UK), ஆகியோரின் அன்பு மாமனாரும், அட்சயன் (Colombo), அஸ்வித்தா (Colombo), அபிராம் (Colombo), ஆதன்யா (Colombo) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2024) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் திருச்சியில் (இந்தியா) உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 05.00 மணியளவில் தகனக்கிரியைக்காக திருச்சி காவேரிக் கரையில் உள்ள ஓயாமாரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருச்சி,
இந்தியா.

தகவல்:
குடும்பத்தினர்.
மதீதரன் - 077 631 3571
முகுந்தன் - 077 773 8715

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LB CIM
## இப்போது இன்னும் simple

CIM மூலம் அனைத்தையும் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்




முற்றிலும் ஒருங்கிணைக்கப்பட்ட பயோமெட்ரிக் உறுதிப்படுத்தல்
(விரல் ரேகை மற்றும் பேஸ் ஐடி)

மேம்படுத்தப்பட்ட பயனர் இடைமுகம் மற்றும்
சிரமமற்ற பாவனையாளர் அனுபவம்

நிலையான வைப்பு
- திறந்த நிலையான வைப்புகள்
- நிலையான வைப்புகளுக்கு உடனடி கடன் சேவை
- முதிர்வு வழிமுறைகள்
- டிஜிட்டல் சான்றிதழ்கள்
- நிலையான வைப்புகள் மீதான Top Ups
- மீளப்பெறல்கள்
- வழக்கமான நிலையான வைப்புகளை டிஜிட்டல் நிலையான வைப்புகளாக மாற்றுதல்

தங்கக் கடன்கள்
- உங்கள் தங்கக் கடன்களுக்கு உடனடி Top Ups
- தங்கக் கடன் புதுப்பிப்பு, அடகு மீட்பு மற்றும் மூலதனக் குறைப்பு

டிஜிட்டல் கடன்கள்
- டிஜிட்டல் தனிநபர் கடன்கள் மற்றும் வியாபாரக் கடன்கள்

குத்தகை மற்றும் கடன் மீள்கொடுப்பனவு
- மூன்றாம் தரப்பினர் உள்ளடங்கலான கடன்கள் மற்றும் குத்தகை மீள்கொடுப்பனவு
- நிலையான கட்டளைகளைப் பயன்படுத்தி தானியங்கி முறையில் கொடுப்பனவு

LB சேவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளக் கூடியமை

ஏனைய சேவைகள்

பரிமாற்றல் / எந்தவொரு கணக்குக்கும் (CEFT) பணத்தை அனுப்புதல் / பெற்றுக்கொள்ளுதல், உங்களது எந்தவொரு வங்கிக் கணக்கையும் இணைப்பதன் மூலம் உங்கள் Wallet இனை Top-Up செய்யுங்கள் (JustPay), உங்கள் மொபைல் இலக்கத்தை பயன்படுத்தி ஏனைய CIM Walletsஇல் இருந்து பணத்தை அனுப்பவும் பெறவும் முடியும், LankaQR இனை பயன்படுத்தி ஸ்கேன் செய்து கொடுப்பனவை மேற்கொள்ள முடியும், உங்கள் மொபைல் போனை reload செய்து, பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் எந்தவொரு வங்கியினதும் கிரடிட் கார்ட் கொடுப்பனவையும் மேற்கொள்ளலாம், பயன்பாட்டு அடிப்படையிலான பரிவர்த்தனை ஒதுக்கீடுகள், விளம்பரம் இல்லாத இடைமுகங்கள்.

உங்கள் பரிவர்த்தனைகளை எளிதாக்குவதுடன், புத்தாக்க உலகிற்கான கதவைத் திறக்கின்றது. LB CIM,
இன்றே LB CIM App இனை Download செய்யுங்கள்!



DOWNLOAD TODAY! GET IT ON Google Play | Download on the App Store

0112 200 500 | www.lbcim.com

CIM POWERED BY LB FINANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஞ்சி, கஜூவுடன் ஒருவர் கைது

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டதாகச் சந்தேகிக்கப் படும் இஞ்சி மற்றும் கஜு என்பனவற்றுடன் ஒருவர் கடற்படையினரால் நேற்றுத் திங்கட்கிழமை கைது செய் யப்பட்டுள்ளார்.

இவை முச்சக்கர வண்டி யில் எடுத்துச் செல்லப்பட்ட போது காங்கேசன் துறைக்கு அருகே கைப்பற் றப்பட்டுள்ளன. 250 கிலோ இஞ்சி மற்றும் 50 கிலோ கஜு என்பனவே கைப்பற் றப்பட்டுள்ளன என்று கடற் படையினர் தெரிவித்தனர்.

சந்தேகநபர் சான்றுப்பொ ருள்களுடன் பலாலி பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளார். (எ-100)

# கால்நடைகளுக்கு எமனாகும் சட்டவிரோத கம்பித் தடங்கள்



முல்லைத்தீவு, ஏப். 9

துணுக்காய் - கல்விளான் காட்டு எல்லையில் சட்டவி ரோதமாக அமைக்கப்பட்டுள்ள கேபிள் கம்பி சுருள் தடங்களில் சிக்கி தமது கால்நடைகள் உயிரி ழப்பதாக பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமது வாழ்வாதாரமான கால் நடைகள் சட்டவி ரோத கேபிள் கம்பி சுருள் தடங்களில் சிக்கி இறந்து விடுவதாகவும் தெரிவித்த பண்ணையா ளர்கள் கிழமைக்கு 20 க்கும் மேற்பட்ட கால்ந டைகள் கம்பிச் சுருள் தடங்களில் சிக்கி இறக் கின்றன என்றும் தெரி வித்துள்ளனர்

துணுக்காய்ப் பகுதிக ளில் கால்நடைகளுக் கான மேய்ச்சல் தரவை என்பன இல்லாத கார ணங்களால் காடுகளின் எல்லைகளில் கால்ந டைகளை விட்டு மேய்க் கும் போது காட்டு விலங் குகளை பிடிப்பதற் காக வைக்கப்படுள்ள கம்பிச் சுருள் தடங்களில் சிக் கியே தமது கால்நடை கள் இறப்பதாக அவர் கள் மேலும் தெரிவிக் கின்றனர்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மற்றும் கால்நடை அபிவிருத்தித் திணைக்களங்களுக்கு பலதடவைகள் முறைப் பாடுகள் வழங்கியிருந் தும் எந்த ஒரு நடவடிக் கையும் இதுவரை எடுக் கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். (ஓ-35)

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் அம்பலவாணர் கந்தையா பாலசிங்கம்**

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)



அன்னையின் மடியில்
16.10.1925

அரசடிக்காடு கதிர்காம சுவாமி
பாதங்களில் சரண்
09.04.2012
திதி: (28.03.2024)
பங்குனிமாத அபுரபக்கதிருதியை

பன்னிரண்டு ஆண்டுகள் பறந்து
போனதே ஐயா....!
பாசங்கொண்ட மனங்கள்
பரிதவித்து ஏங்குதே
கடல் வானம் கூட நிறம்மாறினாலும்
மனம் கொண்ட பாசம்
தடம் மாறிடாதே....!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


40/9, சீனியர் லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
'துவாரகா'
கதிர்காமசுவாமி கோவிலடி,
காரைநகர்.

(cs 54665) (N-1)

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 . 02 . 1944



மறைவு
13 . 04 . 2021

மொழி ஞாயிறு

**K.C.சிவசுப்பிரமணியம்**

(ஆங்கிலப் பேராசான்)

கண்ணீரில் நீந்தும் நினைவில் மூன்றாண்டு
நிறைந்து கரைந்ததோ
நீங்க ஆதாத உம் புகழ்
மறந்தும் மறையுமோ..

கண்கண்ட நீர்
காலம் கடத்தில் முடியா
கானல் கரைத்திட முடியா
காப்பியம்..

பார்வை குன்றிலும்
தளர் நடையிலும்
நில்லாத உம் பயணம்
ஒரு நீதி..

ஆதி மொழி தடங்காது
அகிலம் காட்டும்
அண்டை மொழி ததும்பிட
வழிசெய்தீர்..

எழுத்தறிவித்து இறைவனானீர்
இல்லாதும் இருக்கின்றீர்
நில்லாது பூமி சுழலும் மட்டும்
நீங்காது உம் நினைவும்..

கந்தமுருகேசனார் வீதி,
புலோலி தெற்கு.

குடும்பத்தினர்,
உறவினர்கள், மாணவர்கள்.

(CS/28113) J-1

## வேலையாட்கள் தேவை (பெண்)

தனியார் நிறுவனம் ஒன்றின் கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு நன்கு முன் அனுபவமுள்ள சிற்றுண்டிகள் ( பற்றிஸ் / ரோல் ) தயாரிப்பதற்கு **பெண் வேலையாட்கள் தேவை.** கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- **076 363 1895**

(CS/54654) J-1

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்

விண்ணப்பதாரரின் பெயர்: தம்புசாமி கணேசலிங்கம்

சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர்: தம்புசாமி பெண் செல்லம்மா

முகவரி: சைவ வித்தியாசாலை வீதி, வட்டாரம் - 05

வட்டாரம் 05, சைவ வித்தியாசாலை வீதி ஆதன இல: 19/5 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை சங்கானை கோவில்பற்று சங்கானை இறை "அந்திரானை எனும் பெயருள்ள நிலப்பரப்பு பத்தும் மேற்கெல்லையில் கிணற்றுப்பங்கும் உள்ள இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2006.06.03ம் திகதிய 7371ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் தம்புசாமி செல்லம்மாவின் பிள்ளைகளுக்கு சமபங்காக வந்தடைந்து பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 07.07.2021ம் திகதிய 12604ம் இலக்க நன்கொடை உறுதிப்பிரகாரம் தம்புசாமி கணேசலிங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆதன விபரம்

நில அளவையாளர் T.தங்கராஜா அவர்களால் வரையப்பட்ட 17.08.2019ம் திகதிய 11069ம் இலக்க நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 7 குழி 14.56 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு - கந்தையா இராஜரத்தினத்தின் ஆதனம்
கிழக்கு - பாதையும் பேரம்பலம் கைம்பெண் ருக்குமணியின் ஆதனமும்
தெற்கு - சுப்பிரமணியம் மகேஸ்வரியின் ஆதனம்
மேற்கு - கந்தையா நவரத்தினத்தினதும் அமிர்தலிங்கம் தெய்வானைப்பிள்ளையினதும் ஆதனங்கள்

மேற்குறித்த ஆதனத்தை தம்புசாமி கணேசலிங்கம் என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்களூடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.


# விற்பனை சந்தை

புதுவருடத்தை முன்னிட்டு, தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகினரும், சிறு தொழில் முயற்சி அபிவி ருத்தி அலகின ரும் இணைந்து, 'சமுர்த்தி அபி மானி' என்னும் தொனிப்பொரு ளில் முன்னெடுத்த, உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்த லும் விற்பனைச் சந்தையும் நிகழ்வு, சாவகச் சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இன்று செவ் வாய்க்கிழமை யும், நாளை புதன்கிழமையும் நடைபெறவுள் ளது.

பிரதேசசெயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட சமுர்த்தி பணிப் பாளர் எவ்.சி. சத்தியசோதி கலந்து கொள்ள வுள்ளார். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## சுப்பிரமணியம் செல்வராசா

வண்ணை - சாந்தையார்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் தர்மபரிபாலன சபையின் ஆயுள்கால அங்கத்தவரும், முன்னாள் பொருளாளராகவும், நிர்வாகசபை உறுப்பினராகவும், ஓதுவாராகவும், சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் ஆயுள்கால அங்கத்தவரும், முன்னாள் தலைவராகவும், பொருளாளராகவும், நிர்வாக சபை உறுப்பின ராகவும், பஜனைக்குழுத்தலைவராகவும், கடந்த 35 வருடங்களுக்கு மேலாக ஆலயத்திற்கும். கழகத்திற் கும் தொண்டாற்றிய சுப்பிரமணியம் செல்வராசா அவர்கள் கனடாவில் இயற்கை எய்தியதைக் கேள்வியுற்று ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ கற்பக விநாய கரை வேண்டிநிற்பதோடு, அன்னாரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**


| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.08.1940 | 05.04.2024 |

366, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

வண்ணை - சாந்தையர்மடம்
ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
தர்மபரிபாலன சபையினரும்,
சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரும்.

(CS/54668) J-1

# மரண அறிவித்தல்



அமரர்

## நடேசர் சிவயோகசுந்தரம்

(சின்னத்தம்பி)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு ஜாஎலயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவயோகசுந்தரம் (சின்னத்தம்பி) நேற்றுமுன்தினம் (07-04-2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் எஸ்தர் (ஜாஎல) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான நடேசர் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோபர் நியூமன் - பெறில் நியூமன் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவஞானசுந்தரம் (கனடா), சிவகாம்பிகை, கமலாம்பிகை (ஆச்சி), இராஜேஸ்வரி (பவானி ரீச்சர்), சிவராஜசுந்தரம் (அபுதாபி), ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசுரேஸ் (ஜாஎல), சிவசுரேஷினி (லண்டன்), சிவநரேந்திரன் (Colombo - Assistant General Manager Head of Broken Sales of Allianz Insurance Lanka Ltd) ஆகியோரின் அன்புத் தந்தையும், நீற்ரா (ஜாஎல), பிரதீபன் (லண்டன்) சாதனா (ஜாஎல) ஆகியோரின் அன்பு மாமனாரும், சொமேஸ், சலோம், அயோன், ஹரிஷ், பவிஷா, எமிஷியா, எவொன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், காலஞ் சென்றவர்களான பாலேந்திரன், உருத்திரமூர்த்தி மற்றும் லக்சுமி, மைதிலி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமரன், நந்தன், ஸ்ரீ பிரணவன் ஆகியோரின் அன்பு சின்னமாமாவும், `முகுந்தன், புவனி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.04.2024) வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் அவரது சுதுமலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30.10.1951 | 07.04.2024 |

பாடசாலை முன்பாக,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

**தகவல்:**
**திருமதி சிவகாம்பிகை பாலேந்திரன்.**
(சகோதரி)
021 225 5336
076 842 6340

(CS/54671) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடு இழந்து வாகனங்கள் விபத்து ஆறு பேர் காயம்

பளை ஏப்.9

பளையில் ஏ-9 வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த விபத்தில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ஹைஏஸ் வாகனமும், பளை நோக்கிச் சென்ற ஹன்ரர் வாகனமுமே விபத்துக்குள்ளாகியுள்ளன.

கட்டுப்பாட்டை இழந்த ஹன்ரர் வாகனம் எதிரே வந்த ஹைஏஸ் வாகனத்தில்மோதிவீதியை விட்டு விலகியதோடு, அருகிலிருந்த தண்டவாளத்தையும் கடந்தது. இந்த விபத்தில் வாகனங்களில் பயணித்த 6 பேர் காயமடைந்தனர். அவர்கள் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ஏ-9)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த சோபகிருது வருடம் மாசி மாதம் 30ம் நாள் (13.03.2024) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு

### அமரர் சின்னத்தம்பி நவரத்தினலிங்கம்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (10.04.2024) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 12.04.2024 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார் கோவில் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.
077 284 1817

(CS 00162) S-1



## மரண அறிவித்தல்



திருமதி
### பரமேஸ்வரி (Baby) விநாயகமூர்த்தி
இளைப்பாறிய ஆசிரியை ( கோப்பாய், காரைநகர் )

01. கமயாவளை (Gamewella) தமிழ் வித்தியாலயம் பசறை
02. கோணக்கலை (Gonekalla) தமிழ் வித்தியாலயம் பசறை
03. தமிழ் மகளிர் மகா வித்தியாலயம் (Tamil Convent) பதுளை
04. கோப்பாய் நாவலர் வித்தியாலயம் கோப்பாய்
05. கன்னியர் மடம் மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம்

கோப்பாய் காரைநகர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்டு தற்போது வெள்ளவத்தை No.25 3/3 1st Chapel Lane இல் வசித்தவருமான திருமதி. பரமேஸ்வரி (Baby) விநாயகமூர்த்தி 05.04.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலம் சென்ற திரு.சிங்கராசா (P.W.D. Overseer), திருமதி அன்னம்மா (கோப்பாய்), ஆகியோரின் அன்பு மகளும், காலம் சென்ற திரு திருமதி. சங்கரப்பிள்ளை - மாரிமுத்து (காரைநகர்) ஆகியோரின் அன்பு மருமகளும், திரு.விநாயகமூர்த்தி இளைப்பாறிய அதிபர் அவர்களின் அன்பு மனைவியும், சுபாஷினி, சுகிர்தினி, சுந்தரேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலம்சென்றவர்களான விக்கினேஸ்வரன், உருத்திரன் மற்றும் பத்மப்பிரியா ஆகியோரின் அன்பு மாமியாரும், ராஜ்சஜீவன், கல்யாணி, துவாகர் (சாயி), நிதுரா, ஹரிஸ், அமரா ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலை கல்கிசையில் 11.04.2024 வியாழக்கிழமை காலை 8:00 மணிக்கு அஞ்சலிக்கு வைக்கப்பட்டு மதியம் 12:00 மணி அளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிஸ்சை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல் : [illegible]



## மரண அறிவித்தல்

மலர்வு 25 . 01 . 1943



உதிர்வு 08 . 04 . 2024

### சிங்கராசா மரியநாயகி

உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா மரியநாயகி அவர்கள் நேற்று (08.04.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அதிரியாம்பிள்ளை - றோசமுத்துவின் பாசமிகு ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான அனனியாஸ் - செல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சிங்கராசாவின் அன்பு மனைவியும், அமரர்களான செபமாலைமுத்து, அமிர்தநாதர் மற்றும் சின்னப்பிள்ளை (கனடா), அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், சரோஜினி (பிரான்ஸ்), அன்ரன் ஜோ அமல்ராஜ் (அமலன் - களஞ்சியப் பொறுப்பாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), வினோதினி மற்றும் காலஞ்சென்ற குமுதினி ஆகியோரின் அன்புத் தாயாரும், றமேஷ்கோண் (பிரான்ஸ்), புனிதசீலி (ஆசிரியை, யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), டார்வின் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், றொசானி (பிரான்ஸ்), றொனால்ட்டோ (பிரான்ஸ்), றொபேல் (பிரான்ஸ்), றொஷ்னி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), டிக்சன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.04.2024) செவ்வாய்க்கிழமை இறுதி நல்லடக்கத்திற்காக ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் பிற்பகல் 03.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, காக்கை தீவு புனித அடைக்கலநாயகி கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 670 1405

(CS 00160) S-1



## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 05 . 1947



மறைவு 05 . 04 . 2024

### அன்ரனி பெர்ணான்டோ மரியதாஸ்

தேவாலய ஒழுங்கை, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி பெர்னாண்டோ மரியதாஸ் அவர்கள் கடந்த (05.04.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்ரனி பெர்னாண்டோ - அன்ரனிக்கம்மா (பொன்னம்மா) தம்பதியரின் பாசமிகு மகனும், குளோறில்டா றஞ்சினியின் அன்புக் கணவரும், மைக்சன் அருணின் (Nations Trust Bank) பாசமிகு தந்தையும், கௌதமியின் (D.F.C.C.Bank) மாமனாரும், கொட்ரிக் அகன்யனின் பேரனும், புஸ்பமணி, காலஞ்சென்றவர்களான யேசுதாசன், ராஜினி, மற்றும் ஜசிந்தா, றஞ்சன், சாந்தி (கனடா), கொன்ஸ்ரன்ரைன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.04.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித சவேரியார் ஆலயம், திருநெல்வேலியில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு. புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 223 0898

(CS 28509) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போக்கட்டி அ.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு, பாடசாலை மைதானத்தில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாணம் 'ஸ்மார்ட் கிங்ஸ் எலக்ரோனிக்' நிறுவனத்தின் பணிப்பாளர் ம.சிந்துஜன், தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளரும் வலயப் பிரதிநிதியுமான திருமதி வி.சுனில்ஆரியரட்ண, தென்மராட்சி கல்வி வலய தொழில்வழிகாட்டல் ஆலோசனை ஒய்வு நிலை அதிகாரி அ.மனோரஞ்சிதன், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-159)



மன்னார் மாவட்டத்தில், அரச திணைக்களம் மற்றும் தனியார் அமைப்புகளில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கி, மாவட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான செயலமர்வு ஒன்று, மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் கொழும்பிலுள்ள எஸ்.ஐ.பி.எல் நிறுவனத்தின் முகாமையாளர் மற்றும் குறித்த நிறுவனத்தின் சுற்றுச்சூழல் பிரதி நிதி ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-56)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.03.2024 திங்கட்கிழமை அன்று இறைபதமெய்திய
**எங்கள் குடும்பத் தலைவி**
அமரர்
**புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (09.04.2024) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (10.04.2024) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
076 217 2498

**குடும்பத்தினர்.**

(CS 161) A-1

## சட்டக்...

மயப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
கண்டியில் சட்டத்தரணிகளுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டமே இலங்கையின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான விரைவான தீர்வாகும். அதன் பயனை மக்களுக்கு வழங்கும் வகையில்உரிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. அனைத்துத் துறைகளிலும் இன்று நவீனத்துவம் தேவைப்படுகின்றது. அனைத்துத் துறைகளும் நவீனப்படுத்தப்படவேண்டுமானால், சட்டக்கட்டமைப்பு நவீனப்படவேண்டியதும் அவசியம்.
சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தைத் தொடர வேண்டுமா அல்லது அதை மாற்றியமைப்பதா என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டும். சம்மதித்துவிட்டு ஒவ்வொரு முறையும் முடிவை மாற்றிக்கொள்ளும் அவப்பெயர் இலங்கைக்கு உண்டு. இதுவே நாட்டுக்காக எமக்குக் கிடைத்துள்ள கடைசி வாய்ப்பாகும். எனவே, இந்த நன்மையை மக்களுக்கு வழங்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சட்டபூர்வமாக்க எதிர்பார்க்கிறோம். நாட்டின் மீதான பொறுப்பில் இருந்து நாம் யாரும் தப்பமுடியாது. அதனால் முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.
நாட்டின் தற்போதைய பொருளாதார முறைமையில் சிக்கித் தவிப்பதா அல்லது போட்டிமிக்க ஏற்றுமதி பொருளாதாரத்தில் கவனம் செலுத்தி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதா என்பதை முடிவு செய்து நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.
இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வலுப்படுத்தமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அதற்குத் தேவையான பௌதிக வளங்களும் மனித வளங்களும் எம்மிடம் உள்ளன - என்றார். (அ-ம)

## பன்றித்தலைச்சி...

பங்குனித் திங்கள் உற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. ஆலயப் பங்குனித் திங்கள் உற்சவத்தை முன்னிட்டு கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் பல நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் நீண்ட தூரத்திலிருந்தும், அயற் பகுதிகளிலிருந்தும் பறவைக் காவடிகள் எடுத்து வந்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.
புத்தூர் கலைமதி கிராமத்தைச் சேர்ந்த இருவர் ஒன்றாகப் பறவைக் காவடி எடுத்து நேற்று முற்பகல் 11.30 மணிக்கு ஆலய முன்றிலை வந்தடைந்தனர். இவர்களில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் அம்மன் வடிவில் பறவைக் காவடி எடுத்துவந்த காட்சி ஆலயத்தில் திரண்டிருந்த அடியவர்கள் மற்றும் வீதியால் சென்ற மக்கள் பலரது கவனத்தை வெகுவாக ஈர்த்தது. (அ-ம-66)

## வயலின்...

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கலை நிகழ்வொன்றில் வயலின் இசை வழங்கிக் கொண்டிருந்தபோது திடீரென இயலாமை ஏற்பட்டு வீட்டுக்குச் சென்ற நிலையில், நேற்று நள்ளிரவு 12.30 மணியளவில் காலமானார்.
கலைத்துறையில் சிறந்த சேவையாற்றும் கலைஞர்களுக்கு வருடந்தோறும் இலங்கை அரசால் வழங்கப்படும் 'கலாபூஷணம்' விருது இவரின் இசைப்பணிக்காகக் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## மன்னாரில்...

சைக்கிளில் குறித்த இளைஞர் சென்றுகொண்டிருந்தபோது, பின்னால் வந்த வாகனம் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது. விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-56)

## தபால்...

யங்கள் மூலம் பண விநியோகம், வெளிநாட்டுகூரியர் சேவை மற்றும் பொதுப் பொதிகள் விநியோகம் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. (அ-ம)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்.
தராசோ வேலைகளும் தரமாக செய்து தரப்படும்.
தொடர்பு:- 077 334 1281

## அறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம் பஸ்-நிலையத்திற்கு அருகாமையில் அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 076 808 5192

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள
**பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு**
கீழ்வரும் வேலைக்கு
**ஆட்கள் தேவை.**
**சமையலறை சுத்திகரிப்பாளர் (ஆண்)**
(CS/54675) J-1
070 745 8567

## வீடு வாடகைக்கு

**"துவாரகா" ஏரம்பு வீதி**
(பங்களா றோட்) மீசாலை மேற்கு,
மீசாலையில் அமைந்துள்ள சகல
வசதிகளையும் கொண்ட
**வீடு வாடகைக்கு உண்டு.**
(CR/42174) J-1
தொடர்பு:- 076 249 8453

## பணியாளர் தேவை

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்திற்கு ஆண் பணியாளர் தேவை.
கணினி அறிவுள்ளவரும் சாவகச்சேரி நகர எல்லைக்குள் வசிப்பவரும் விரும்பத்தக்கது.
ஆர்வமுள்ளவர்கள் சாவகச்சேரி தனங்களப்பு வீதியிலுள்ள மன்றப் பணிமனைக்கு (15.04.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணிக்குள் சமூகம் தரவும்.
**தொடர்பு: மன்றச் செயலாளர்**
**077 171 3163**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய மட்ட பூப்பந்தாட்டப் போட்டியில்

# சென். பற்றிமா பாடசாலை சம்பியன்

19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான, இலங்கைத் தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பூப்பந்தாட்ட விளையாட்டுப் போட்டியில் மன்னார்,பேசாலை சென்.பற்றிமா தேசியப் பாடசாலை தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பூப்பந்தாட்ட விளையாட்டுப் போட்டிகள், அண்மையில் கொழும்பு எம்.பி.ஏ. உள்ளரங்கிலும் கடந்த திங்கட்கிழமை கொழும்பு றோயல் கல்லூரியிலும் இடம்பெற்றன.


இந்தப் பூப்பந்தாட்டப் போட்டிகள் ஏ , பி , சி , டி. மற்றும் ஈ என்று வகைப்படுத்தப்பட்ட போட்டிகளாக நடைபெற்றன. 35 பாடசாலைகள் கலந்துகொண்ட குறித்த விளையாட்டுப் போட்டியில், 'டி' பிரிவில் போட்டியிட்டு மன்.பேசாலை சென்.பற்றிமா தேசியப் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுச் சம்பியனாகியுள்ளது. இந்தப் போட்டிகளில் கலந்துகொண்டு பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமையை ஈட்டிக் கொடுத்த பேசாலை சென். பற்றிமா பாடசாலை வீரர்கள் எஸ்.தீப்சன் மஸ்கார்ஞ்ஞ, ரி.அனோஜன்டலிமா, டீ.டெரின்சன் சோசை. டீ.நிதேஸ் ராஜ், வீ.எரிக் டியூசன் குரூஸ், எஸ்.சுவீதன் பெர்னாண்டோ, ஏ.நிக்கேசன் தற் குரூஸ், சீ.டொனல் மற்றும் ஈ.சம்சன் கூஞ்ஞ ஆகியோருக்குப் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ப-60)



## மரண அறிவித்தல்

### முத்துச்சாமி சின்னையா

தோற்றம் 09.01.1949 — மறைவு 08.04.2024



சாவகச்சேரி, சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி சின்னையா அவர்கள் நேற்று (08.04.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் காலமானார்.

அன்னார் அமரர்களான முத்துச்சாமி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும். அமரர்களான முத்துச்சாமி - ஈஸ்வரி அவர்களின் ஆசை மருமகனும், அமராவதியின் பாசமிகு கணவரும், குமுதினி. காலஞ்சென்ற தர்மதேவன், குகதர்சினி, தர்மராசா, கபிலன், அமிர்த, பாஜினி, லக்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார். நளினி, திருக்குமார் மரியகதரீன், பிரகாஷ், தர்ஷன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பார்த்தீபன், தீபனா, விதுஷன், டிலக்ஷன், ஷாருஜன், கோகுலன், பிருந்தா, சுவேதா, குயூன்சிகா, கியூட்சன், அனுஸ்ரன், வினிஸ்ரன், அக்ஷயன், சுபிட்ஷயன், ஆகீஷன், கோபிராஜ், நிஷோபா, பூஜா, மயூரன், திலிப்குமார் ஆகியோரின் பாசமிகு பேரனும், லாகிவ் இன் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.04.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 01.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 03.00 மணியளவில் தனங்கிளப்பு வீதியில் அமைந்துள்ள ஐக்கிய கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 077 238 3823 (Whatsapp)
077 125 9591

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 08 . 1944 — மறைவு 08 . 04 . 2024



### பாலச்சந்திரன் பரமானந்ததேவி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கொடிகாமம் மத்தியினை வசிப்பிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் பரமானந்ததேவி அவர்கள் நேற்று (08.04.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மகேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலச்சந்திரனின் அன்பு மனைவியும், இந்திராணிதேவியின் பாசமிகு சகோதரியும், காராளப்பிள்ளையின் பாசமிகு மைத்துனியும், தமிழ்ச்செல்வி (ஆசிரியர், யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), தமிழ்ப்பிரியா (பிரதி அதிபர், கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், - சட்டத்தரணி), ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைச்செல்வன் (பிரான்ஸ்), கஜேந்திரன் (கிரி - தபால் ஊழியர், மிருசுவில்) ஆகியோரின் சிறிய தாயாரும், சிவநேசன் (செலிங்கோ காப்புறுதி நிறுவன முகாமையாளர், சாவகச்சேரி). சுதன் (ஆசிரியர், யா/வரணி மத்திய கல்லூரி), திருமகள் ஆகியோரின் அன்பு மாமியாரும். சிவப்பிரிந்தன், பிரணவி, யஸ்மிதா, கஸ்தூரி, காராளன், கீத்திகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் கொடிகாமம் மத்தியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பாலாவித்தாள் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.C ஒழுங்கை
கச்சாய் வீதி, கொடிகாமம்
077 308 6879, 077 655 1774

(CR 42175) S-1

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 04 . 1933 — இறப்பு 08 . 04 . 2024



### திருமதி பரிமளம் சிவசுப்பிரமணியம்

சுதுமலை மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவிலில் வசித்தவருமாகிய திருமதி பரிமளம் சிவசுப்பிரமணியம் நேற்று (08.04.2024) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராஜா, சேதுராஜா, சுந்தரராஜா, கனகபூரணம், இராசாஇரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காந்திமதி (பபா), யோகராணி (லதா), யமுனராணி (ஜமுனா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் சரவேஸ்வரன் (சறா) ஆகியோரின் அன்பு மாமியாரும், லியோனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2024) செவ்வாய்க் கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

"சுபத்திரை மகால்"
றெயில் றோட், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(CS 27524) A-1

தகவல்: குடும்பத்தினர்
077 674 2013
077 016 20 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்.பீ. ஃபினான்ஸ் வழங்கும் முற்றிலும் புதிய CIM App மூலம் LB CIM மேலும் எளிதாகியுள்ளது

## "LB CIM ஊடாக அனைத்தையும் செய்யுங்கள்"




இற்றைப்படுத்திய LB CIM app அறிமுகப்படுத்தப்பட்ட முக்கியமான நிகழ்வினை எல்.பீ. ஃபினான்ஸ் 2024 ஏப்ரல் 4 ஆம் திகதி கொண்டாடியது. மேம்படுத்திய வகையான இப் புதிய CIM app அதிக வசதியையும் அதிக பாதுகாப்பையும் தருவதோடு நவீன நிதி முகாமைத்துவத்தின் அதிகரித்துவரும் தேவைகள் ஈடு செய்யப்படும் என்ற வாக்குறுதியையும் வழங்குகின்றது. கைவிரல் அடையாளத்தைப் பயன்படுத்தி app இல் நுழைதல் உள்ளிட்ட பயோமெட்ரிக் உறுதிப்படுத்தல் முறையின் சுமுகமான ஒருங்கிணைப்பு இத் தரமுயர்த்தலின் பிரதான அம்சமாகும். பாவனையாளர்கள் ஒரு தொடுகையின் மூலம் பாதுகாப்பான முறையில் தமது கணக்குகளை அணுகுவதற்கு இது இடமளிக்கும்.

மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் இணைந்ததாக, இலகுவான வழிசெலுத்தல் (Navigation) மற்றும் பிரச்சினைகளற்ற அனுபவத்தை உறுதிப்படுத்தும் வகையில் பயனர் இடைமுக வடிவமைப்பும் தரமுயர்த்தப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அறிவின் சகல மட்டங்களிலுள்ள பயனர்களும் இலகுவான முறையில் தமது நிதி அலுவல்களை முகாமைத்துவம் செய்வதற்கு இந்த வடிவமைப்பு வாய்ப்பளிக்கும்.

இற்றைப்படுத்தப்பட்ட CIM app, பாதுகாப்பு மற்றும் பயன்பாட்டு வசதிகளின் மேம்படுத்தல்களுக்கு மேலதிகமாக, பல்வேறு நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விரிவான சேவைகளை இப்பொழுது வழங்குகின்றது. பயனர்கள் இப்போது டிஜிற்றல் முறையில் நிலையான வைப்புகளை ஆரம்பிக்கலாம் லீசிங், கடன்கள், தங்கக் கடன்கள் போன்ற பல்வேறு எல்.பீ. ஃபினான்ஸ் சேவைகளை முகாமைத்துவம் செய்யலாம் கொடுப்பனவுகளை வசதியான முறையில் அட்டவணைப்படுத்தலாம். கணக்குகளுக்கிடையே பணத்தைப் பரிமாற்றம் செய்வதற்கு மட்டுமல்லாமல் வொலட்களை மீள்நிரப்புவதற்கான விருப்பத்தேர்வு, மொபைல் இலக்கங்களைப் பயன்படுத்தி பணத்தை அனுப்புதல்/பெறுதல் என்பன தொடர்பிலும் இந்த app வசதியளிக்கும்.

மேலும், கடன் மீளளிப்புகள், பயன்பாட்டுக் கட்டணக் கொடுப்பனவுகள், கடன் அட்டைத் தீர்ப்பனவுகள் போன்ற இன்னும் ஏராளமான மேலதிக சேவைகளுக்கும் புதிய LB CIM app உதவும். அதிநவீன தொழில்நுட்பம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால், பயனர்களுக்கு மன நிம்மதி அளிக்கும் வகையில் கொடுக்கல் வாங்கல்கள் பாதுகாப்பாகவும் செயற்றிறன் வாய்ந்த முறையிலும் இடம்பெறுவது உறுதிப்படுத்தப்படுகின்றது.

மேம்படுத்தப்பட்ட LB CIM app இன் அறிமுக நிகழ்வில் கருத்து வெளியிட்ட எல்.பீ. ஃபினான்ஸ் தலைமை அதிகாரிகள், வாடிக்கையாளர்களின் இடைவிடாத ஆதரவிற்கு நன்றி தெரிவித்ததுடன், புத்தாக்கமான நிதித் தீர்வுகளை வழங்குவதில் நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் வலியுறுத்தினர். இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டு, கண்டிப்பான பாதுகாப்பு நடவடிக்கைகளினால் வலுவூட்டப்பட்டுள்ள புதிய CIM app, உங்கள் சகல நிதித் தேவைகளுக்கும் ஒரு நம்பிக்கையான தளமாக விளங்குகின்றது.

எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி.யின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. சுமித் ஆதிஹெட்டி தனது உரையில், "டிஜிற்றல் நிதி முகாமைத்துவத்தின் புரட்சிகரமான மாற்றத்தை நோக்கிய எமது பயணத்தில் இன்றைய தினம் ஒரு முக்கியமான மைற்கல்லாகும். மேம்படுத்தப்பட்ட CIM app ஐ அறிமுகப்படுத்தியதன் மூலம் நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் நிதிசார் அனுபவத்தில் மிகச் சிறந்த வசதியையும் பாதுகாப்பையும் வழங்குவதற்கான அர்ப்பணிப்பை மீள வலியுறுத்தியுள்ளோம். எமது வாடிக்கையாளர்கள் எம்மில் வைத்துள்ள நம்பிக்கைக்கும் எமக்கு வழங்கும் ஆதரவிற்கும் நாம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். Fintech (நிதித் தொழில்நுட்ப) துறையில் புத்தாக்கத்தையும் தரச்சிறப்பையும் தொடர்ந்து முன்னெடுக்க நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்" என்று கூறினார்.

நிதி முகாமைத்துவத்தை எளிதாக்குவதற்கும் வாடிக்கையாளர்களுக்குத் தடையற்ற டிஜிற்றல் தீர்வுகளை வழங்குவதற்கும் எல்.பீ. ஃபினான்ஸ் மேற்கொள்ளும் முயற்சியில், மேம்படுத்தப்பட்ட CIM app இன் வெற்றிகரமான அறிமுகம் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றப் படியாகும். பயனர்கள் இப் புதிய சிறப்பம்சங்களையும் செயற்பாடுகளையும் கைக்கொள்ளத் தொடங்கும் அதேசமயத்தில், அனைவருக்கும் மிகச் சிறந்த நிதிசார் அனுபவத்தை வழங்குவதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ள ஒரு Fintech தொழிற்றுறையின் முன்னோடி என்ற தனது நிலையைத் தக்கவைத்துக் கொள்ள உறுதிபூண்டுள்ளது.

## பொதுவேட்பாளர்...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் தொடர்பில் சிந்திக்கப்பட்டது. எனினும், கடந்த தேர்தல்களை விடவும் இந்த வருடத் தேர்தலிலேயே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அதீத அக்கறை செலுத்தப்படுகின்றது. பொதுவேட்பாளர் களமிறங்காத பட்சத்தில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதற்கான முடிவிலேதான் அனேகமான தமிழர்களும் இருக்கின்றனர்.

பெரும்பான்மை இனத்தில், சஜித், ஜனாதிபதி ரணில், அநுரகுமார ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர்களாகக் களமிறங்குவது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. அத்துடன், தற்போது ராஜபக்சக்களும் தனியான வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் பரிசீலித்து வருகின்றனர். ஆதலால், பெரும்பான்மை மக்களின் வாக்குகள் சிதறுண்டு போகப்போவதும், தமிழ் மக்களின் வாக்குகளே ஜனாதிபதியைத் தீர்மானிக்கப்போவதும் உறுதியாகியுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில், தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பில் அவர்கள் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். இதன் வெளிப்பாடுதான் தென்னிலங்கைத் தலைவர்கள் அண்மைக்காலமாக வடக்கு மாகாணத்துக்குத் தொடர்ச்சியாகப் பயணம் மேற்கொள்கின்ற காட்சிகள்.

ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் வடமாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். தமிழர்களின் உரிமைக்காக எந்த வொரு உத்தரவாதத்தையும் அவர் வழங்கவில்லை. இதில் மிகவும் நகைப்புக்குரிய விடயம் என்னவென்றால், தமிழர்கள் இராணுவத்தில் இணைந்துவிட்டால் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று அவர் தெரிவித்துள்ளார். இது, அபிவிருத்தி அடைந்துவிட்டால் வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று ரணில் தெரிவித்த கருத்துகளுக்கு ஒத்ததாகவே இருக்கின்றது. அநுரகுமார திஸாநாயக்க வடக்கு - கிழக்கைப் பிரித்தவர். இரண்டாவது தன்னுடைய பதவியை இராஜினாமா செய்து எமது நிலைப்பாட்டைக் குழப்பியவர். இதனை எல்லாம் மறந்துவிடக்கூடாது. இதனை எல்லாம் அவர் கடந்து இங்கே வருகின்றார் என்றால் அதில் ஓர் உண்மை உள்ளது. தமிழ் மக்கள் நடந்ததை விரைவில் மறந்துவிடுவார்கள் என்பதே அது.

சஜித்தைப்பாருங்கள். முள்ளிவாய்க்கால் படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டுமென நாங்கள் வலியுறுத்தி வந்தபோது அதனைக் கண்டும் காணாமல் இருந்த சஜித், இன்று தென்னிலங்கை வாக்குகளைப்பெறுவதற்காக ஈஸ்டர்தாக்குதலைப் பற்றிக் கூடுதலாகப் பேசுகின்றார். எவ்வாறு இவ்வாறு இரட்டைவேடம் போட முடியும். அங்கே தென்னிலங்கையிலே ஈஸ்டர் தாக்குதலுக்குச்சர்வதேசவிசாரணையைக் கோருகின்ற சஜித் பிரேமதாஸ முள்ளிவாய்க்கால் படுகொலை தொடர்பிலும் சர்வதேச விசாரணையைக் கூறமுடியாதது ஏன்? காணாமல் போனோர் தொடர்பில் மௌனம் காப்பது ஏன்? அவர்களுக்கான நீதித் தொடர்பில் பேசாது இருப்பது ஏன்? 2019ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு நல்ல ஒரு தீர்வு கிடைக்கும் என்று நாங்கள் சஜித்துக்கு வாக்குகளை அள்ளிக் கொடுத்தோம். அன்றிலிருந்துகூட தனக்கு இவ்வளவு மக்கள் ஆதரவளித்தார்களே என்று இந்த மக்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை.


சகல தமிழ்க்கட்சிகளும், மக்களை ஒருங்கிணைத்து ஒரு பொது வேட்பாளரை முன்னிறுத்தவேண்டும். தமிழர்கள் தங்கள் வாக்குகளைச் சிதறடிக்காமல் இருக்கவேண்டும். குறிப்பாக தென்னிலங்கையைச் சேர்ந்தவருக்கு வாக்களிக்கக்கூடாது. இது தொடர்பான தெளிவூட்டல் மக்களுக்கு வழங்கப்படவேண்டும். இந்த பொதுவேட்பாளர் தொடர்பில் பல பேர் பல வியாக்கியானங்களைக் கூறலாம். சேர்ந்து நில்லுங்கள் சேர்ந்த பெறுமதிகளை பெறுங்கள் என பலர் கூறலாம். நாங்கள் சேர்ந்து அரசாங்கத்துடன் பயணிக்கவில்லையா? மைத்திரி - ரணில் கூட்டாட்சிக் காலத்தில், எவ்வளவு விடயங்களை நாங்கள் மேற்கொண்டும் ஏமாற்றப்பட்டோம்.

கடந்த தேர்தல்களில் தென்னிலங்கையைச் சேர்ந்தோருக்கு வாக்களித்து மாபெரும் தவறை நாம் இழைத்திருந்தோம். இம்முறை அந்தத் தவறு நிகழக்கூடாது. நிச்சயமாக தமிழ் மக்களால் ஒரு பொதுவேட்பாளரைத் தேர்ந்தெடுக்கமுடியும். அதனைத் தொடர்ந்து நாம் அடுத்த இலக்கு நோக்கிப் பயணிக்கலாம். அனைத்துக் கட்சிகளும் ஏதோ ஒரு வகையில் இந்த பொதுவேட்பாளர் குறித்துப் பேசத் தொடங்கியுள்ளன. தமிழரசுக் கட்சி இது தொடர்பில் இன்னமும் பேசவில்லை. தமிழரசுக் கட்சி என்ன சொல்கின்றதோ எனக்குத் தெரியாது. என்னுடைய நிலைப்பாடு பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படவேண்டும் என்பதே.

இலங்கைத் தமிழரசுக் கட்சி எடுத்த பல முடிவுகள் தவறாகியே போயுள்ளன. சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிப்பதாக எடுத்த முடிவு பிழையாகப்போனது. சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக எடுத்த முடிவு பிழையாகப்போனது. ஆகவே இந்த முறையும் அவ்வாறான தவறுகளைக் கட்சிவிடாது எனநம்புகின்றேன். இனி இவ்வாறான முடிவு எடுக்கப்படுகின்ற பொழுது அதனைக் கேட்பதற்கு மக்களும் தயாராக இல்லை, கட்சி உறுப்பினர்களும் தயாராக இல்லை - என்றார். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சென்னை சுப்பர் கிங்ஸுக்கு மற்றொரு சொந்தமண் வெற்றி



**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், கொல்கத்தாவை வீழ்த்தி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கொல்கத்தாவை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. முதல் பந்திலேயே பில் ஷோல்ட்டை வெளியேற்றினார் தேஷ் பாண்டே. அதிரடி வீரரான ஷோல்ட்டின் வெளியேற்றம் கொல்கத்தா அணிக்குப் பதற்றத்தை ஏற்படுத்தியது. ஜடேஜாவின் சுழற்பந்து வீச்சு நேற்று எழுச்சி கண்டது. 27 ஓட்டங்களுடன் நரைனையும், 24 ஓட்டங்களுடன் ரகுவன்ஸியையும் வெளியேற்றினார் ஜடேஜா. ஸ்ரேயஸ் ஐயர் அதீத நிதானத்தை வெளிப்படுத்தினார். அவர் 32 பந்துகளில் 34 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். சென்னையின் பந்துவீச்சாளர்கள் தொடர்ந்தும் கட்டுக்கோப்பாகப் பந்துவீசினார்கள். குறிப்பாக ரசலைக் களத்தில் வைத்திருந்து ஓட்டமற்ற பந்துகளை அருமையாக வீசினார் முஸ்டபிஷூர் ரஹ்மான். முடிவில் 9 விக்கெட்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று கொல்கத்தா அணி. பந்துவீச்சில் ஜடேஜா, தேஷ் பாண்டே இருவரும் தலா மூன்று விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணிக்கு 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் ரச்சின் ரவீந்திரா. ஹெய்க்வாட், டாரி மிச்செல் இருவரும் இணைந்து அணியைப் பலப்படுத்தினார்கள். சென்னை அதிரடியாக விளையாடி சராசரியை உயர்த்தும் என்று எதிர்பார்த்த போதிலும் அணித்தலைவர் ஹெய்க்வாட் நிதானமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினார். அவர் ஆட்டமிழக்காது 67 ஓட்டங்களைப் பெற்றாலும் இதற்காக 58 பந்துகளை எடுத்துக்கொண்டார். துபே வழக்கம்போல் அடித்தாடி 18 பந்துகளில் 28 ஓட்டங்களைச் சேர்த்தார். முடிவில் 14 பந்துகள் மீதமிருக்கையில் கொல்கத்தாவை வீழ்த்தியது சென்னை. (ம)


## வரவேற்பாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பெண் வரவேற்பாளர் தேவை.
கணினி அறிவு, ஆங்கில அறிவு, A/L வர்த்தகப்பிரிவில் கற்றிருத்தல் / வர்த்தகம் தொடர்பான கற்கைநெறியைக் கற்றிருத்தல் மற்றும்
1 வருட முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**076 577 5539**
Email : bestchilleng@gmail.com

## கட்டடம் வாடகைக்கு தேவை

தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு யாழ் நகரை அண்டிய பகுதியில் வாகன தரிப்பிட வசதியுடன் குறைந்தது 6000 சதுர அடி அளவு கொண்ட விசாலமான கட்டடம் வாடகைக்கு தேவை.

**077 959 2628**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்திற்கு முன்பாக 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 18 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- மருதனார்மடம் இராமநாதன் கலைக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
- ஒரு பரப்பின் விலை 35 லட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்:

காலை 06.00 மணிதொடக்கம்
மாலை 06.00 மணிவரை

தொடர்புகளுக்கு:
ஜெயம்
**077 814 7389, 077 986 5457**


## நெஞ்சைவிட்டகலாத ஆறாம் ஆண்டு நினைவேந்தல்

அன்னை மடியில்
19 . 11 . 1939



ஆண்டவன் அடியில்
17 . 03 . 2018

### அமரர் புனிதவதி சந்திரசேகரம்

என் அன்புக்கினிய திருவுருவே!
என் கண்ணில் நீர் இல்லை
உன்னை நினைந்து அழுவதற்கு
ஏன் என்றால்?
ஆறு ஆண்டுகளாக உன்னை நினைந்து
ஆறாத்துயரில் கண்ணில் சிந்துகின்றேன்!
காதலுடன் எனை வளர்த்த திருவே
ஈசன் முருகனிடம் நீ சரணடைந்து

இன்றுடன் ஆண்டுகள் ஆறு
ஆலமரமாய் நிழல் தந்த நீ
இன்று எம்முடன் இல்லை நம்பமுடியவில்லை
பண்புடனும் பாசத்துடனும் உறவுகளை
அரவணைத்த நீ இல்லாமல் பரிதவிக்கும்
உன் உறவுகளுடன் உன்னை நினைந்து
உருகும் உன் துணை
சந்திரசேகரம் மற்றும் உறவுகள்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

இல.21/4 ஆடியபாதம் வீதி
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுகளுடன்
சி.சந்திரசேகரம்.

(CS/54650) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு
29 . 08 . 1959



இறப்பு
08 . 04 . 2024

சுருதி வேந்தன் - வயலின் வித்துவான்

### அம்பலவாணர் ஜெயராமன்

( ஓய்வுநிலை யாழ். பொதுசன நூலக புத்தக செவ்வை பார்ப்பவர் )

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் நேற்று (08.04.2024) திங்கட்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (மிருதங்க வித்துவான்) - காமாட்சியம்மா ஆகியோரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், சாரங்கன் (Ceylon Steel Corporation Ltd Area Sales Officer), சைந்தவி (செலான் வங்கி - சுன்னாகம்), சாருகேசி (ஆசிரியை - கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூரி மற்றும் மிரோஜன் (ICBT Jaffna Campus) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆறகனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல. 07 கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 028 7132
021 221 9762

(CS/54667) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org